7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) பதின்மூன்றாவது பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முத்தமிழ் அறிஞர்; வரலாற்று நாயகன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிகளின் தலைவர்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே அனைவருக்கும் வணக்கம்.

13-வது சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடர் 2006 ஆம் ஆண்டு மே திங்கள் 17 ஆம் நாள் தொடங்கி இன்று 10-2-2011 வரை நடைபெற்றுள்ளது. இந்த 15-வது கூட்டத் தொடரில் முதல் கூட்டம் 7-1-2011 முதல் 13-1-2011 வரையிலும், 2-வது கூட்டம் 4-2-2011 முதல் இன்று 10-2-2011 வரையிலும், மொத்தம் 11 நாட்கள் நடைபெற்றுள்ளன.

7-1-2011 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள். 5-2-2011 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இடைக்கால நிதிநிலை அறிக்கையை அளித்தார்கள்.

இந்த ஐந்தாண்டுகளில் இப்பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் குறித்த விவரக் குறிப்புகளை@ நான் படித்ததாகக் கருதி பேரவையின் நடவடிக்கைக் குறிப்புகளில் பதிவு செய்துகொள்ளும்படி நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-25

சட்டமன்றப் பேரவையில் தனது 50 ஆண்டுகாலப் பணியினை நிறைவு செய்து பொன்விழா கண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பேரவையில் பவளவிழா கொண்டாடும் நன்னாளை (மேசையைத் தட்டும் ஒலி) நாம் அனைவரும் எதிர்நோக்கியுள்ளோம் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திற்கும் இந்த நாட்டிற்கும் தொடர்ந்து வழிகாட்டியாக இருந்து உதவ வேண்டுமென்ற எனது அவாவினைத் தெரிவித்துக்கொண்டு பேரவையின் கூட்டத் தொடர் இன்று நிறைவுபெறும் இந்நாளில் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

@ 1550 முதல் 1568 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.